என்றைக்கும் துணை நிற்கும் என்பதை இந்த கவன ஈர்ப்பைக் கொண்டு வந்து உரையாற்றியவர்களுக்கு மட்டுமல்ல; இந்த அவையில் இருக்கக்கூடிய எல்லா உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இதுகுறித்து சில கோரிக்கைகளை, சில உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்த கருத்துக்களைத் தொடர்ந்து, வழக்கினுடைய முடிவுகள் எப்படியிருந்தாலும், மனிதாபிமான அடிப்படையில், உயிரிழந்த விக்னேஷ் அவர்களது குடும்பத்தினுடைய ஏழ்மை நிலையைக் கருத்தில்கொண்டு, உடனடியாக 10 இலட்சம் ரூபாய் நிவாரணம் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படும். அதே அடிப்படையில், சுரேஷ் அவர்களது உயர் சிகிச்சைக்கான செலவையும் அரசே ஏற்கும் என்பதை இந்த அவையில் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கின்றேன்.

பிற்பகல் 12–50

5. தகவல் கோரல்

ரேஷன் பொருட்களை வழங்குகையில் கைரேகையைப் பதிவு செய்வதில் உள்ள சிக்கல்களைக் களைதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022–2023 (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. ராஜா, என்னவென்று சொல்லுங்கள்.

முனைவர் T.R.B. ராஜா: ஒரு சிறிய கவன ஈர்ப்பு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசின் National Food Security Act, Chapter V–Reforms in Targeted Public Distribution System என்பதன் அடிப்படையில் ஆதார் அட்டையுடன் இணைத்து அங்காடிகளில் கைரேகையை வைத்து பொருட்களை வழங்கும் முறையை தமிழக அரசு கடந்த சில ஆண்டுகளாக. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு தகவல் கோரல்தான்.

முனைவர் T.R.B. ராஜா: கடந்த சில ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகிறது. டெல்டா பகுதிகளில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முக்கியமான விஷயம்தான். ரேஷன் கடை குறித்த விஷயம்.

2022 ஏப்ரல் 26]

முனைவர் T.R.B. ராஜா: *ஆம். டெல்டா பகுதியில் நமது விவசாயப் பெருங்குடி மக்கள், வயதான விவசாயிகள். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ரேஷனில் அரிசி வாங்கச் சென்றபோது, ரேகை விழாததால் பொருட்கள் கிடைக்கவில்லை என்பதால், அதுசம்பந்தமாகச் சொல்கிறார்.*

முனைவர் T.R.B. ராஜா: *அரியலூரில் முந்திரி விவசாயத் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதி போன்ற ஒரு சில இடங்களில் கைரேகை பதிவதில் சிக்கல்கள் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். எனவே, இந்தச் சிக்கல்களைச் சரி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் புதிய நவீன முறையை அறிமுகம் செய்வாரா என்பதைக் கேட்டு, அவையின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். கொஞ்சம் விளக்கமாக எல்லோருக்கும் புரியும்படியாகச் சொல்லுங்கள்.*

***மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு விதி 110-ன்கீழ் முத்தமிழறிஞர், குடும்பத் தலைவர், மூதறிஞர் அவர்களுக்கு, அவர் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் தேதியை அரசு விழாவாக அறிவித்ததற்கு, நான் திருவாரூர் மாவட்டத்தினுடைய* in-charge *என்பதால், அந்த மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எனக்கு பொறுப்பு கொடுத்திருக்கிறீர்கள். அவருடைய அருமை பெருமைகளையெல்லாம் நீங்கள் சொல்லி, அவருடைய சிலை ஓமந்தூரார் வளாகத்திலே அமைக்கப்படும் என்று தெரிவித்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, திருவாரூர் மாவட்ட மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் முனைவர் T.R.B. *ராஜா அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1-10-2020 முதல் இந்திய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-ன்படி பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்கள் உண்மையான பயனாளிகளைச் சென்றடைந்து, பயன் பெறுவதை உறுதி செய்யும்வண்ணம், பயனாளிகளின் ஆதார் எண் அடிப்படையில் விரல் ரேகை*

[திரு. அர. சக்கரபாணி] [2022 ஏப்ரல் 26

சரிபார்ப்பு நடவடிக்கைக்கு பின்னர் இன்றியமையாப் பண்டங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. இதன்படி குடும்ப அட்டையில் இணைக்கப்பட்டுள்ள உறுப்பினர் எவரும், அவரது விரல் ரேகை சரிபார்ப்புக்குப் பின்னர் பொருட்களைப் பெறலாம். இதன் காரணமாக மாநிலத்தில் எந்த நியாய விலைக் கடையிலும் எந்தக் குடும்ப அட்டைதாரரும் முகவரி மாற்றம் மேற்கொள்ளாமலேயே அவர்கள் இன்றியமையாப் பண்டங்களைப் பெற்றுக்கொள்ள இயலும். விரல் ரேகை சரிபார்ப்பு முறை, வயோதிகம் உள்ளிட்ட இதர காரணங்களால் தோல்வியடையும் நிலையில் அவர்களுக்கு உணவுப் பண்டங்கள் மறுக்கப்படக்கூடாது என தெளிவாக ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. நியாய விலைக் கடைகளுக்கு நேரில் வருகை தரும் நிலையில் இப்பயனாளிகளுக்கு குடும்ப அட்டையில் உள்ள துரிதக் குறியீடு ஸ்கேன் செய்தும், குடும்ப அட்டையின் அடிப்படையில் பொருள் வழங்க விற்பனை இயந்திரத்தில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பயனாளிகளுக்கு பதிவேட்டில் கையொப்பம் பெற்று, பொருட்கள் விநியோகம் மறுப்பின்றி மேற்கொள்ளப்படுகிறது.

நியாய விலைக் கடைகளுக்கு வருகை தர இயலாத மாற்றுத் திறனாளி, மூத்த குடிமக்கள், உடல் நலமின்றி உயிர் காக்கும் மருத்துவ சிகிச்சை பெறும் நோயாளிகள் உள்ளிட்ட பயனாளிகளுக்கு, அவர்களால் கடைக்கு வர இயலாத நிலையில் அவர்கள் சார்பில் அங்கீகரிக்கும் ஒரு பிரதிநிதி வாயிலாக பண்டங்களைப் பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி வாயிலாக பண்டங்கள் பெற உரிய படிவம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. படிவம், பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் கிடைக்கும். www.tnpds.gov.in என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்யலாம். படிவத்தில் விவரங்களை முழுமையாகப் பூர்த்தி செய்து நியாய விலைக் கடைகளில் கொடுத்தால் போதுமானது. படிவ விண்ணப்பங்கள்மீது வட்ட வழங்கல் அலுவலர், உதவி ஆணையர்களால் ஒப்பளிப்பு ஆணை உடனுக்குடன் வழங்கப்படும். ஒப்பளிப்பு ஆணை பெறப்பட்டவுடன், தாங்கள் நியமிக்கும் பிரதிநிதிகள் வாயிலாகத் தொடர்ந்து கடையிலிருந்து பயனாளிகள் தங்களுக்குரிய பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதுபோன்று கோரிக்கை வைத்தவர்களுக்கு 15–4–2022 வரை 2 இலட்சத்து 39 ஆயிரத்து 809 பேருக்கு அங்கீகாரச் சான்று படிவங்கள் ஒப்பளித்து வழங்கப்பட்டுள்ளன. நடப்பு மாதத்தில் 22–4–2022 வரை

2022 ஏப்ரல் 26] [*திரு. அர. சக்கரபாணி*]

நியாய விலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட 1 கோடியே 79 இலட்சத்து 47 ஆயிரத்து 639 பரிவர்த்தனைகளில், 1 கோடியே 76 இலட்சத்து 30 ஆயிரத்து 498 பரிவர்த்தனைகள் விரல் ரேகை சரிபார்ப்பின்படியே மேற்கொள்ளப்பட்டன. இது 98.23 விழுக்காடு ஆகும். விரல் ரேகை சரிபார்ப்பு காரணமாக, எந்தக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொருட்கள் தடையின்றி, மறுப்பின்றி பெறும்வகையில் திட்டம் செயலாக்கம் செய்யப்பட்டுள்ளது. பொது விநியோகத் திட்ட அங்காடிகளின் விற்பனையாளர்களுக்கும், இத்திட்டச் செயலாக்கத்திற்கு பொறுப்புடைய அலுவலர்கள் அனைவருக்கும் இதனை நன்முறையில் அட்டைதாரர்களுக்கு சிரமம் ஏதுமின்றி செயல்படுத்த தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டும் வருகிறது.

பிற்பகல் 12–55

ஆனாலும், மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் இந்தக் கை ரேகை சரிபார்ப்பு முறையில் சிக்கல் இருப்பதாகப் பலமுறை கூறியிருக்கிறார்கள். எனவே, வயது மூப்பு மற்றும் இதர காரணங்களால் கை ரேகை சரிவர பதிவு செய்ய இயலாத இனங்களில், கண் கருவிழி சரிபார்ப்பு முறை–Iris based authentication *மூலம் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கும் நடைமுறை மகாராஷ்டிரா, அஸ்ஸாம், தெலுங்கானா மற்றும் உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்களில் தற்போது செயல்பாட்டில் இருந்து வருகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையின்படி, கண் கருவிழி சரிபார்பபு முறை ஒரு முன்னோடித் திட்டமாக,* On a Pilot basis*–ல் தமிழ்நாட்டில் ஓர் ஊரகப் பகுதியிலும், ஒரு நகரப் பகுதியிலும் செயல்படுத்தப்படும். தனி நபர் அடையாளம் உறுதி செய்யப்பட்டு, நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்கள், இம்முறையின் செயல்பாடுகள் குறித்து நேரடியாக அறிந்தும், அதனை பயன்படுத்துவோர்களின் கருத்துகளைத் தெரிந்துகொண்டும் இத்திட்டத்தைச் செம்மையாக்கி, மாநிலம் முழுவதும் உள்ள நியாய விலைக் கடைகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*